# இளைஞர் அணி சமூக வலைதள மாவட்டத் துணை அமைப்பாளர் பொறுப்புக்கு, சென்னை கிழக்கு, சென்னை வட கிழக்கு, சென்னை தென் மேற்கு ஆகிய மாவட்டங்களுக்கான நேர்காணல்!

## தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் மேற்கொண்டார்!









இயக்கத்தின் முதன்மை அணியாம் கழக இளைஞர் அணி நிர்வாகிகளுக்கு, சமூக வலைத்தளப் பயிற்சியளிக்கவும், அவர்களின் சமூக வலைத்தளம் சார்ந்த பணிகளை ஒருங்கிணைக்கவும், தலைமைக்கழகத்தின் ஒப்புதலுடன், கழகத் தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலில், கழக மாவட்டத்துக்கு ஒருவர் என அனைத்து மாவட்டங்களிலும் துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர். கழக மாவட்ட வாரியாக அவர்களை இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் நேர்காணல் செய்து வருகிறார். அந்த வகையில், நேற்று (29.6.2025) சென்னை கிழக்கு, சென்னை வட கிழக்கு, சென்னை தென் மேற்கு மாவட்ட சமூக வலைத்தளத் துணை அமைப்பாளர் பொறுப்புகளுக்கு விண்ணப்பித்திருந்தவர்களை, மாநில துணைச் செயலாளர் எஸ்.ஜோயல் முன்னிலையில் நேர்காணல் செய்தார். அவர்களின் சமூக வலைத்தளப் பக்கங்களைப் பார்வையிட்டு அவர்கள் இதுவரை ஆற்றியுள்ள கழகப் பணிகள் குறித்து கேட்டறிந்ததுடன், அவர்கள் கொண்டு வந்திருந்த ஆவணத் தொகுப்புகளையும் ஆய்வு செய்து, கழக பணி சிறக்க வாழ்த்தினார்.

### எழும்பூர் தொகுதி: நம்ம எக்மோர் உதயநிதி ஸ்டாலின் ஸ்போர்ட்ஸ் கிளப் சார்பில்

## முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள்: கால்பந்து- கிரிக்கெட் விளையாட்டுப் போட்டிகள்!

### இ.பரந்தாமன், எம்.எல்.ஏ., பரிசுகளை வழங்கினார்!

சென்னை,ஜூன்.30-

முத்தமிழறிஞர் கலைஞரின் 102வது பிறந்தநாளையொட்டி, எழும்பூர் தொகுதியில் கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், எம்.எல்.ஏ., ஏற்பாட்டில், நம்ம எக்மோர் உதயநிதி ஸ்டாலின் ஸ்போர்ட்ஸ் கிளப் சார்பில் கால்பந்து மற்றும் கிரிக்கெட் போட்டிகள் கடந்த 28.06.2025 மற்றும் 29.06.2025 ஆகிய இரு நாட்கள் நடந்தன. இவ்விரு விளையாட்டுப் போட்டிகளிலும் பங்கேற்ற 50 அணிகளுக்கும், 500 விளையாட்டு வீரர்களுக்கும் இ.பரந்தாமன், எம்.எல்.ஏ., ரொக்கப் பரிசுத் தொகை, ஊக்கத் தொகை, விளையாட்டு உபகரணங்கள் உள்ளிட்டவற்றைப் பரிசாக வழங்கினார்.

சேத்துப்பட்டு, மேயர் இராமநாதன் சாலையில் அமைந்துள்ள பல்கலைக்கழக மைதானத்தில் கிரிக்கெட் போட்டியும்; சத்தியமூர்த்தி சாலையில் அமைந்துள்ள டாக்டர் அம்பேத்கர் விளையாட்டுத் திடலில் கால்பந்தாட்டப் போட்டியும் நடந்தன.

எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் இ.பரந்தாமன், சேத்துப்பட்டு, டாக்டர் அம்பேத்கர் திடலில் நடந்த பரிசளிப்பு விழாவில் கால்பந்தாட்டம் மற்றும் கிரிக்கெட் போட்டிகளில் முதல் மற்றும் இரண்டாம் இடம் பிடித்த அணிகளுக்கு வெற்றிக் கோப்பையோடு ரொக்கப் பரிசுத் தொகையும்; இவ்விரு போட்டிகளிலும் விளையாடிய சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கத் தொகையும் மற்றும் இப்போட்டிகளில் பங்கேற்ற 50 அணிகளுக்கும், 500 விளையாட்டு வீரர்களுக்கும் கிரிக்கெட் மட்டை, கிரிக்கெட் ஸ்டெம்ப், கிரிக்கெட் பந்து, கால்பந்து, கையுறைகள், விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய தொகுப்பு ஆகியவற்றையும் பரிசாக வழங்கினார்.

இந்நிகழ்வில் எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் செயலாளர் ஜெ.விஜயகுமார், முன்னாள் வட்டச் செயலாளர் ஆர்.புருசோத்தமன், முன்னாள் பகுதிப் பொருளாளர் ந.கலையரசன், 108 ‘அ’ வட்டப் பகுதிப் பிரதிநிதி என். இளஞ்செழியன், அவைத் தலைவர் வெ.மருதன், மாவட்டப் பிரதிநிதி மு.கமலக்கண்ணன், 108வது வட்டத் துணைச் செயலாளர் கே.சீனிவாசன், 58வது வட்ட முன்னாள் பகுதிப் பிரதிநிதி விஜயகுமார், எழும்பூர் தெற்குப் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஜெ.சிலம்பரசன், எல்.சுகுமாறன்; 108 ‘அ’ வட்ட இளைஞரணி அமைப்பாளர் பு.சதிஷ்குமார், 108வது வட்டத் துணைச் செயலாளர் இந்திரா காந்தி, 108வது வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஜோ.சந்தோஷ்குமார், எழும்பூர் தெற்குப் பகுதி மகளிர் அணி துணை அமைப்பாளர் முத்துலெட்சுமி, எழும்பூர் வடக்குப் பகுதி மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர் பி.எம்.ஜெயலெட்சுமி, முன்னாள் அவைத் தலைவர் கி.புஷ்பராஜ், தலைமைக் கழகப் பேச்சாளர் எம்.இ.தேவநிதி, வழக்கறிஞர் நேரு பிரபாகரன், சூளை நேரு, விஜய தேவராஜ், பாக முகவர் கவிதா, ஜெ.சரவணன், வேலு, கே.பி.பார்க் சதிஷ், விஷால், குணா, ஜெயசீலன், சண்முகம், தாஸ் உள்ளிட்ட கழக நிர்வாகிகளும், செயல்வீரர்களும் கலந்துகொண்டனர்.

### பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. – அமைச்சர் மா.சுப்பிரமணியன் – ஆர்.எஸ்.பாரதி வாழ்த்துகின்றனர்!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் ஆலந்தூர் கோ.ராஜ்வேல் இல்ல மணவிழா!

### பி.குணாளன் – என்.சந்திரன் – கோல்டு பிரகாஷ் – முரளி கிருஷ்ணன் முன்னிலை!

சென்னை, ஜூன் 30 -

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், ஆலந்தூர் தொகுதி முன்னாள் வட்டச் செயலாளர் - முன்னாள் இளைஞரணி துணை அமைப்பாளர் ஆலந்தூர் கோ.ராஜ்வேல் - நினைவில் வாழும் ரா.கல்பனா ஆகியோரது இளைய மகள் ஆர்.அபிநயா, கோட்டூர்புரம் வி.ஜனார்த்தனன் - காஞ்சனா ஆகியோரது புதல்வர் ஜெ.நவீன்குமார் ஆகியோரது மணவிழா 2.7.2025 புதன்கிழமை காலை 9.15 மணி முதல் 10.15 மணிக்குள்ளாக ஆலந்தூர் புதுப்பேட்டை தெரு ஏ.டி.பி.டி.நிதி கல்யாண மண்டபத்தில் நடைபெறுகிறது.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையேற்று திருமணத்தை நடத்தி வைக்கிறார்

1.7.2025 செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணி அளவில் நடைபெறம் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் பகுதிச் செயலாளர் ப.குணாளன், என்.சந்திரன் எம்.சி., கோல்டு டி.பிரகாஷ், கே.பி. முரளிகிருஷ்ணன், ஆர். டி.பூபாலன் எம்.ஆர்.சீனிவாசன், வது வட்ட கழக செயலளர் ஜெ. செல்வேந்திரன்,, ஏ.சாலமோன், பி.எம். பிருந்தாஸ்ரீ, கலாநிதி குணாளன். கே.பாபுகுமார், இரா. கீர்த்திராஜ், கோ.பிரவீன் குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.



மாமன்ற உறுப்பினர்கள்: எஸ்.ரேணுகா, ஜெ.பூங்கொடி ஜெகதீஸ்வரன், வி. பாரதி, எஸ்.அமுதப்பிரியா, ஜே.தேவி, ஜெ.துர்காதேவி, வட்ட கழக நிர்வாகிகள் எம்.வி.குமார், வி.ராஜா, எஸ்.சகிம்ஷா, விமலாகாமராஜ், ஏ.ஆர்.ஸ்ரீதர், ஆர். எஸ்.சரவணன், அ.ரூபன்தமிழ்ச்செல்வன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

கழக பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன், , அமைச்சர் மா.சுப்பிரமணியன், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக தீர்மானக்குழு செயலாளர் மீ.அ. வைத்திலிங்கம், தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. க.செல்வம் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர்.ராஜா, இ. கருணாநிதி, ச.அரவிந்த்ர மேஷ், ப.தாயகம் கவி, வரலட்சுமி மதுசூதனன், ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன், சென்னை மேயர் பிரியா ராஜன், தாம்பரம் மேயர் க.வசந்தகுமாரி, சென்னை துணை மேயர் மு.மகேஷ்குமார், தாம்பரம் துணை மேயர் உள்ளிட்ட மண்டலக் குழுத் தலைவர்கள், பகுதிச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வட்டச் செயலாளர்கள் , அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.



காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஒன்றியம், சாலமங்கலத்தில் ரூ.51.05 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு, தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு குறு, சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் குடியிருப்பு ஒதுக்கீட்டு ஆணைகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் கலைச்செல்வி மோகன், திருப்பெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வப்பெருந்தகை, மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் படப்பை ஆ.மனோகரன், ஒன்றியக்குழு தலைவர் சரஸ்வதி மனோகரன், குன்றத்தூர் மத்திய ஒன்றியச் செயலாளர் இ.மணி ஆகியோர் உள்ளனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் செம்மொழி நாளை முன்னிட்டு துறைமுகம் மேற்கு பகுதி செயலாளர் எஸ்.முரளி தலைமையில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு புகழரங்கத்தை துவக்கி வைத்தார். நடிகர் சத்தியராஜ், கவிஞர் பா.விஜய், புலவர் இராமலிங்கம், நடிகர் அஜய்ரத்தினம் புகழுரையாற்றினார்கள். தமிழன்பிரசன்னா, எம்.விஜயகுமார், பி.ஸ்ரீராமுலு எம்.சி., என். பி.எம்.ஷேக் அப்துல்லா, எஸ்.ராஜேஷ்ஜெயின், ஆர்.கலைச்செல்வி, எம்.இ.கனி, கே.ஆர்.அபரஞ்சி, பா.அண்ணாதுரை, ஜி. ராமமூர்த்தி, எம்.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.ரவிச்சந்திரன், டி.சதிஷ்குமார், சேப்பாக்கம் வே.பா.பிரபாகரன், எல். சத்தியநாராயணன், சு.புகழேந்தி, டி.ராஜா, எம்.பரத்குமார், கே.கவியரசு, ஆ.நா.பார்த்திபன், டி.எஸ்.சேகர் ஆகியோர் கலந்து கொண்டனர்.